விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 056 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 01 வியாழக்கிழமை (13.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## உலகைக் கட்டியெழுப்ப ஒன்றிணைய வேண்டும்

### உலக அரச உச்சி மாநாட்டில் அநுர



(டுபாய்)
உலக காலநிலை பிரச்சினைகள் வறியவர், செல்வந்தர் என்று பாராமல் அனைவரினதும் கதவுகளைத் தட்டிக் கொண்டிருப்பதாகவும், தேச எல்லைகளைக் கடந்து பயணிக்கின்ற சவால்களுக்கு முகங் கொடுக்க நாங் ▷15

## புலிகளுடனான யுத்தத்தின்போதும் நாட்டில் மின்தடை ஏற்படவில்லை

### கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகள், உள்நாட்டு யுத்தத்தின் போது 33 ஆயிரம் மெகா வோல்ட் மின் பிறப்பாக்கியை தீயிட்டு கொளுத்தியபோது கூட, நாடளாவிய ரீதியில் மின் துண்டிக்கப்படவில்லை.

அவ்வாறிருக்கையில் குரங்கின் மீது பழி சுமத்தி குரங்குச் சேட்டைகள் காண்பிக்க வேண்டாம். அளவுக்கதிகமாக மக்களை ஏமாற்றவும் முற்பட வேண்டாம் என்று ஐக்கிய மக்கள் சக்தி, அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார். ▷15

# ‘தமிழரின் இடங்களை பௌத்த மயமாக்காதே’

### தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)
‘தமிழரின் பூர்வீக வாழ்விடங்களை பௌத்த மயமாக்காதே’ போன்ற கோஷங்களை எழுப்பி தையிட்டி விகாரைக்கு எதிராக நேற்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## பேருந்து மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

### பரந்தனில் சம்பவம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி பரந்தன் பகுதி ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. ▷15

### கிளிநொச்சி புளியம்பொக்கணையில்

## கிணற்றில் வீழ்ந்த இளைஞன் உயிரிழப்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி - புளியம்பொக்கணை கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட முசிரம்பிட்டிப் பகுதியில் பொதுக்கிணற்றில் வீழ்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவமானது நேற்று ▷15

### கடல்வளத்தை அழித்துவிட்டு

## தொப்புள்கொடி உறவுகள் எனக் கூறுவதில் பயனில்லை

### இந்திய மீனவர்கள் தொடர்பில் அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)
இலங்கையின் கடல் வளத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் தமிழக மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர் எனவும், இவ்வாறு நாசகாரச் செயலில் ஈடுபட்டுவிட்டு செல்லும் வழியில் ▷15

### கிளிநொச்சியில்

## பேருந்து சாரதிகள் மீது தாக்குதல்

(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் இரு வேறு பேருந்து சாரதிகள் மீது தாக்குதல் சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலையில் ▷02

## யாழ்ப்பாண கம்பன் விழா நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் யாழ்ப்பாணக் கம்பன் விழா நாளை 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 15, 16 ஆகிய மூன்று தினங்கள் இடம்பெற வுள்ளது.

விழாவின் காலை நிகழ்வுகள் நல்லூர் ஆதீன மண்டபத்திலும் மாலை நிகழ்வுகள் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்திலும் இடம்பெறும்.

மூன்று தினங்கள் நடைபெறும் கம்பன் விழாவில் இலக்கிய ஆணைக்குழு, விவாத அரங்கு, தனியுரை, பட்டிமண்டபம், சிந்தனை அரங்கம், நாடக அரங்கம், வழக்காடு ▷15




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சுனா எம்.பியின் தாக்குதலில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

அர்ச்சுனா எம்.பியின் தாக்குதலில் நபர் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழில் நேற்று முன்தினம் இரவு, தனியார் விருந்தினர் விடுதி ஒன்றுக்குள் வைத்து அர்ச்சுனா எம்.பி காணொளி எடுக்க முற்பட்ட போது, அங்கு நின்ற நபருக்கும் அவருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த நபரை விடுதிக்குள் வைத்து அர்ச்சுனா எம்.பி தாக்கியுள்ளார்.

இது தொடர்பான சிசிடிவி காணொளியும் வெளியாகியுள்ளது.

எனினும், குறித்த நபர் தன்னைத் தாக்கியதாக தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-33)

## பேருந்து...

இருந்து நேற்று மாலை அக்கராயன் பகுதிக்கு ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களை ஏற்றிச் சென்ற பேருந்தை வழிமறித்து மதுபோதையில் வந்தவர்கள் அக்கராயன் பகுதியில் வைத்து பேருந்தின் கண்ணாடியை உடைத்ததுடன் சாரதி மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

அதே சமயம் கிளிநொச்சியிலிருந்து தனியார் பேருந்து ஒன்று பயணிகளை ஏற்றி அக்கராயன் பகுதிக்குச் சென்ற பொழுது வீதியால் பயணித்த மற்றும் ஒரு பேருந்தை மறித்து தனியார் பேருந்து சாரதி மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஆடை தொழிற்சாலை பேருந்தின் சாரதி மற்றும் தனியார் பேருந்து சாரதி இருவரும் அக்கராயன் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுஅங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ம-316)

# வட மாகாணத்தின் அபிவிருத்திக்கு உதவிகளை எதிர்பார்க்கின்றோம்

## ஆளுநர் நா.வேதநாயகன்



வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் தற்போதைய அரசாங்கம் சாதகமான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ள நிலையில், ஜப்பான் அரசாங்கத்திடமிருந்து மேலும் உதவிகளை எதிர்காலத்திலும் எதிர்பார்ப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

ஜப்பான் அரசாங்கத்தின் நிதி உதவியுடன், ஐ.நா. முகவர் அமைப்பான யு.என். எப்.பி.ஏ. நிறுவனத்தால் ஊர்காவற்றுறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் புனரமைக்கப்பட்ட மத்திய சிகிச்சை நிலையம் நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய ஆளுநர், ஜப்பானிய மக்களுக்கு வடக்கு மக்கள் சார்பாக இந்த இடத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஜப்பானிய அரசாங்கத்தால் தொடர்ச்சியாக பல்வேறு உதவிகள் எமக்கு கடந்த காலத்திலும் கிடைக்கப்பெற்றிருந்தன. எதிர்காலத்திலும் அந்த உதவிகள் தொடரவேண்டும் என வேண்டிக்கொள்கின்றேன்.

குறிப்பாக தெல்லிப்பழையில் அமைந்துள்ள புற்றுநோய் மருத்துவமனைக்கான தேவைப்பாடுகள் அதிகம் உள்ள நிலையில் அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்ற கோரிக்கையை இங்கு முன்வைக்கின்றேன்.

அதேபோல வடக்கு மாகாணத்தின் மிக முக்கியமான மருத்துவமனையாக உள்ளயாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையை தேசிய மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும். அதற்குரிய உள்கட்டுமானங்களுக்கான உதவிகள் தொடர்பிலும் ஆராயுமாறும் இந்தச் சந்தர்ப்பதில் வேண்டுகோள் முன்வைக்கின்றேன்.

அதேநேரம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தனவுடன் நேற்று காலை உரையாடும்போது எமக்கு ஏற்பட்டுள்ள ஆளணி வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தேன். விரைவில் அதனை மேற்கொள்வதாக அவரும் கூறியிருக்கின்றார். அதைச் செயற்படுத்துவதன் ஊடாக எமது மாகாணத்தின் சுகாதார சேவைகளை மேம்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னாரில் 9 சிகிச்சை நிலையங்கள் இவ்வாறு புனரமைப்புக்காக உள்வாங்கப்பட்டு அவற்றில் 8 நிலையங்களின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன. அவற்றுக்கான சான்றிதழ்களும் இந்த நிகழ்வில் வைத்து கையளிக்கப்பட்டன. (ம)


உ





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓமந்தை விளையாட்டு அரங்கில் பூப்பந்தாட்ட பயிற்சி முகாம்



(குருமன்காடு)

வடமாகாணத்தில் முதன் முறையாக பூப்பந்தாட்ட பயிற்சியாளர் தரம் ஒன்றிற்காக நான்கு நாட்கள் பயிற்சி முகாம் நேற்று வவுனியா, ஓமந்தை உள்ளக விளையாட்டரங்கில் ஆரம்பமாகி இடம் பெற்று வருகின்றது.

இலங்கை பூப்பந்தாட்ட பயிற்சி மேம்பாட்டு சங்கத்தின் தலைவர் புத்திக்க டி செல்வா, வடமாகாண பூப்பந்தாட்ட சங்கத்தின் இணைப் பாளர் தே.கமலன், ஓமந்தை விளையாட்டு மைதான இணைப்பாளர் தனுராஜ், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் வடமாகாண பூப்பந்தாட்ட சங்கத்தின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த பயிற்சி முகாமானது வவுனியா மாவட்ட பூப்பந்தாட்ட சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இலங்கை பூப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில், இலங்கை பூப்பந்தாட்ட பயிற்சி மேம்பாட்டு சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கொழும்புக்கு வெளியே முதன் முறையாக இடம்பெறும் இப்பயிற்சி முகாமில் வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய மாவட்டங்களில் இருந்தும் பயிற் சியாளர்கள் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-250)



மன்/தேவன்பிட்டி றோமன் கத்தோலிக்கத் தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

(படம்:-கனகராஜா)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 900 | 750 | 800 | 650-700 | 800 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1200 | 1000 | 900-1000 | 1200 |
| தக்காளி | 200 | 200 | 250 | 140 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 260 | 250 | 200-250 | 200 |
| கோவா | 350 | 280 | 250 | 300 | 350 |
| கரட் | 450 | 800 | 800 | 770 | 1000 |
| பூசணி | 120 | 140 | 150 | 80 | 200 |
| புடோல் | 200 | 280 | 200 | 250 | 320 |
| வாழைக்காய் | 250 | 160 | 150 | 100-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 300 | 150-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 200 | -- | 200 |
| பாகற்காய் | 500 | 500 | 600 | 400-500 | 600 |
| வெண்டக்காய் | 300 | 400 | 300 | 300 | 600 |
| கருணைக் கிழங்கு | 120 | 200 | 180 | 150 | 250 |
| பயற்றங்காய் | 800 | 700 | 800 | 300-400 | 800 |
| லீக்ஸ் | 350 | 380 | 300 | 340 | 450 |
| பீற்றூட் | 300 | 200 | 250 | 400 | 400 |
| கறிமிளகாய் | 1000 | 1000 | 1000 | 800 | 1200 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | 1500 | 2400 |
| போஞ்சி | 400 | 350 | 300 | 350 | 600 |
| கத்தரிதம்புள்ள | 750 | 600 | 700 | 400 | 700 |
| கீரை – 1 பிடி | 120 | 120 | 150 | 50-70 | 200 |
| தேசிக்காய் | 300 | 250 | 150 | 150-200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 200 | 250 | 150-250 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 400 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 180 | 150 | 200 | 150 | 200 |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | [illegible] |
| வல்லாரை | 60 | 70 | 100 | [illegible] | 80 |
| ஈரப்பலா | 150 | 110 | 80 | 100 | 150 |

# மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யா/சண்டிலிப்பாய் இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப 1.30 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வி.நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் திருமதி. ஆர்.ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (6-8)

(கரணவாய்)

நெல்லியடி யா/பொற்பதி றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.குகதாசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலாளர் அ.வினோராஜ் கலந்து கொள்ளவுள்ளார். (6-8-60)

(யாழ்ப்பாணம்)

யா/ஊரெழு கணேச வித்தியாசாலையின் விளையாட்டு மைதான நுழைவாயில் திறப்பு விழாவும் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியும் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இ.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, திருமதி.மகேஸ்வரி நடேசபிள்ளை (நுழைவாயில் அனுசரணையாளரின் தாயார்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8)

(யாழ்ப்பாணம்)

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக் கிழமை பி.ப 1 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வி.நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம கல்வி வலய டி.டி.இ.நிர்வாகம் என்.சிவநேசன் கலந்து கொள்ளவுள்ளார். (6-8)

# கொக்கிளாய்-புல்மோட்டை பாலம் புனரமைக்கப்பட்டால்

## சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்-ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு ம்ாவட்டத்தின் கொக்கிளாயையும் திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டையையும் இணைக்கும் பாலம் அமைக்கப்பட்டால் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு அது பெரிதும் உதவியாக இருக்கும் என வடக்கு மாகாண ஆளுநர் ஜப்பானியத் தூதுவரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கின் சுற்றுலாத் துறையை மேம்படுத்த போக்குவரத்து வசதிகள், வீதிகள் அதற்குப் பிரதான சவாலாக இருப்பதாகவும் கொழும்பிலிருந்து யாழிற்கான பயண நேரம் அதிகம் என்பதால் இது சுற்றுலாத்துறையை வடக்கில் மேம்படுத்துவதில் சில தடங்கல்களை ஏற்படுத்துகின்றது எனவும் ஆளுநர் தூதுவருக்கு தெரியப்படுத்தினார்.

வடக்கு மாகாணத்தின் தேவைப்பாடுகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக் கும் இலங்கைக்கான ஜப்பா [illegible] ஆகியோருக்கும் இடை [illegible] சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

போருக்கு முன்னர் இயங்கிய பல தொழிற்சாலைகள் மீளவும் இயக்கப்படாமையால் வேலைவாய்ப்பு வடக்கில் சவாலாக உள்ளது. மேலும் விவசாய மற்றும் மீன்பிடியில் வடக்கில் உள்ள தேவைப்பாடுகள் தொடர்பிலும் தூதுவருக்கு ஆளுநர் தெரியப்படுத்தினார்.

புதிய அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாகவும் தூதுவர் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார். அத்துடன் வடக்கு மாகாணத்துக்கு கிடைக்கப் பெறும் ஏனைய நாடுகளின், நிறுவனங்களின் உதவிகள் தொடர்பிலும் ஆளுநரிடம் தூதுவர் கேள்விகளை எழுப்பினார்.

ஜப்பானியத் தூதுவருட னான சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், ஆளுநரின் இணைப்புச் செயலாளர் எந்திரி அ.எ.சு.ராஜேந்திரா ஆகியோரும் கலந்து கொண்டனர். (6-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றின் தரம்குறைவு கர்ப்பிணிகளுக்கு ஆபத்து!

## சுவாச வைத்தியர் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**காற்றின் தரம் குறைந்து வருவதன் காரணமாகக் கர்ப்பிணித் தாய்மார்களின் கரு பாதிக்கப்படும் என சுவாச வைத்தியர் பேராசிரியர் துமிந்த யசரத்னே தெரிவித்துள்ளார்.**




மாசுபட்ட காற்றானது கருவின் எடையைக் குறைக்க வழிவகுக்கும் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகளில் சுவாசப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் சிசு இறந்த நிலையில் பிறக்க வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பேராதனை மற்றும் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக் கழகங்கள் ஆகியவை தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் காற்று மாசுபாட்டின் தாக்கம் குறித்து ஆய்வொன்றை நடத்தி வருகின்றன.

வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவுகளுக்கு வருகை தரும் நோயாளிகளில் 40% பேர் சுவாசப் பிரச்சினைகளால் பாதிக்கப்படுவதாகவும் பேராசிரியர் யசரத்னே குறிப்பிட்டார். (நி-8)

## சிறுவர் தொடர்பான வழக்குகளை விரைவில் நிறைவுசெய்யத் திட்டம்

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகளை விரைவில் நிறைவு செய்வதற்காகப் புதிய வேலைத்திட்டங்களைத் தயாரிக்கவுள்ளதாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

சில சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு பல வருடங்கள் செல்வதாக அவர் தெரிவித்தார்.

துஷ்பிரயோகம் இடம்பெற்ற தினத்திலிருந்து வழக்குத் தாக்கல் செய்யப்படுவதற்கு சுமார் 5 வருடங்கள் செல்வதாக அவர் குறிப்பிட்டார்.

காலம் தாழ்த்தி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு சாட்சி வழங்கப்படும் போது பாதிக்கப்பட்ட சிறுவர்களினால் சம்பவம் தொடர்பான முழுமையான தகவல்களை நினைவில் வைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு இடம்பெறும் போது குற்றவாளிகள் தப்பிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக நீதியமைச்சர் தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பில் சட்ட மா அதிபரே வழக்குத் தாக்கல் செய்வதாகவும் அவரது பணிக் குழாத்தில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் தனியான பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் வழக்கு விசாரணைகளை விரைவில் முடிவுறுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நம்பிக்கை வெளியிட்டார். (நி-8)

## விவசாய ஏற்றுமதிகள் ஊடாக இலங்கைக்கு அதிக வருமானம்

(கொழும்பு)


விவசாய ஏற்றுமதிகள் ஊடாக, இலங்கை வரலாற்றிலேயே அதிகளவு வருமானம் கடந்த வருடத்தில் ஈட்டப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த ஏற்றுமதிகள் ஊடாக கடந்த ஆண்டில் 89,217 மில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக ஏற்றுமதி விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

44,262 மெட்ரிக் தொன் விவசாய ஏற்றுமதிகள் ஊடாக இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மிளகு ஏற்றுமதி மூலமே அதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், அதன் ஊடாக 51,524 மில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி-8)

## கடவுச்சீட்டு வரிசைக்கு ஏப்ரலுக்குள் முடிவு




(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள கடவுச்சீட்டு வரிசைகளை அகற்றுவதற்கு முடிவு செய்துள்ளதாகக் குடிவரவு - குடியகல்வுத் துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரத்திற்குள் 24 மணி நேர சேவை தொடங்கப்படுவதால் குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையில் உள்ள அனைத்து ஊழியர்களும் பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இரவும் பகலும் உழைக்க உறுதி பூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-8)

## இராசிபலன்

**13.02.2025**
**மாசி 01, வியாழக்கிழமை**
**பிரதமை முன்னிரவு 8.56 மணிவரை**

**மகம் முன்னிரவு 9.45மணிவரை**
**சுபநேரம் 8.04-9.34 மணிவரை**
**இராகுகாலம் 2.04-3.34 மணிவரை**
**அமிர்த சித்தம்**

**சந்திராஷ்டமம்**
**உத்தராடம், திருவோணம்.**

**வளவன்**




பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், முயற்சிகளில் ஆர்வம் கூடும்.




உங்களின் கருத்துக்குப் பாராட்டுக்கள் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.




எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், பிரயாண பயமுண்டு.




தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பயணங்கள் கைகூடும்.




நண்பர்கள் ஒழிவு மறைவின்றிப் பழகுவார்கள், குடும்பச் சுமைகூடும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




பயணங்களால் பலனுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி கூடும், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.




மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், பயணங்கள் கைகூடும், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




உடல் நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**செல்வம் மூடுபனி போன்றது. நிமிடத்தில் சிதறிப்போகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார திட்டத்துக்கு யாழ்.நகரம்தெரிவு



(யாழ்ப்பாணம்)

சுகாதார நகரத் திட்டத்துக்கு யாழ். நகரம் தெரிவு செய்யப் பட்டமைக்கான சான்றிதழ் ஐ.நா வதிவிடப் பிரதிநிதியால் வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது யாழ். மாநகர சபை ஆணையாளர் எஸ். கிருஸ்ணேந்திரன், யாழ். பல் கலைக்கழக மருத்துவபீடாதி பதி மருத்துவர் ஆர்.சுரேந்திர குமாரன் ஆகியோரும் உடனி ருந்தனர்.

வடக்கு மாகாண ஆளுநருக் கும், இலங்கைக்கான ஐ.நா வின் நிரந்தர வதிவிடப் பிரதி நிதிக்கும் இடையில் சிநேக பூர்வமான சந்திப்பு நேற்று முன்தினம் ஆளுநர் செயலகத் தில் இடம்பெற்றது.

இதன்போது வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத் தித் திட்டங்கள் தொடர்பிலும், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர் தல் தொடர்பாகவும் அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் வடக்கு மாகாண ஆளுந ருடன், ஐ.நா வின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி கலந்து ரையாடினார். (6-8)



யாழ். நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூச மஞ்சத் திருவிழா நேற்று முன் தினம் மாலை பக்தி பூர்வமாக நடைபெற்றது.

படம் - சிவசாந்தன்

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு (2025) வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு "அனைத்து பெண் கள் மற்றும் சிறுமிகளுக்கு உரிமைகள்" எனும் கருப்பொ ருளை முன்னிலைப்படுத்தி (சமத்துவம், அதிகாரமளித்தல், அனைவருக்கும் சம உரிமை கள், அதிகாரம் மற்றும் வாய்ப் புக்களைத் திறக்கக்கூடிய நட வடிக்கை மற்றும் யாரும் பின் தங்காத ஒரு பெண்ணிய எதிர் காலம்) எனும் கருப்பொருளில் குறும் படத்திற்கான திரைக் கதை, குறும்படம், ஆவணப் படம், புகைப்படம் மற்றும் ஓவி யப் போட்டிகளை நடத்தவுள் ளது.

திறந்த போட்டிகளாக நடை பெறும் இப்போட்டிகளில் பங்கு பற்ற ஆர்வமுள்ளவர்கள் மக ளிர் விவகார அமைச்சு, வ.மா, இல.04, புளுடி லேன், புங்கன் குளம் சந்தி, அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி ஊடாகவோ அல்லது அமைச்சின் மின்னஞ்சல்: npminwa@gmail.com மற் றும் தொலைபேசி இல. 021 222 0883 ஊடாகவோ தொடர்பு கொண்டு போட்டி நுழைவுக் கான விண்ணப்பம் மற்றும் விதி முறைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு https://np.gov.lk/ எனும் வடக்கு மாகாண சபையின் இணையத்தளத்தினைப்பார் வையிட முடியும் என ஏற்பாட் டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# யாக்கரைப் பகுதியில் கோடாவுடன் இருவர் கைது

(சாவகச்சேரி)

பருத்தித்துறை மதுவரி நிலைய உத்தியோகத்தர்களின் நடவடிக்கையினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் கசிப்பு உற்பத் திக்கு தயாராக இருந்த ஒரு தொகுதி கோடா மீட்கப்பட்டிருப் பதுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

பருத்தித்துறை - யாக்கரைப் பகுதியில் இருந்து கசிப்பு உற் பத்திச் சந்தேக நபர்களை குறித்த உத்தியோகத்தர்கள் பின்தொடர் ந்து வந்த நிலையில் சாவகச் சேரி - சரசாலைப் பகுதியில் வைத்து மேற்படி கைது நடவடிக் கையை முன்னெடுத்திருந் தனர்.

பருத்தித்துறை மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி ரஷி கரன் தலைமையிலான குழுவி னரே மேற்படி கைது நடவடிக் கையை முன்னெடுத்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (6-8-30)

# ஐஸ் போதையுடன் இளைஞன் கைது

(கொழும்பு)

கந்தானை ரயில் நிலையத் திற்கு அருகில் உள்ள பிரதேசத் தில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கந்தானை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது ஒரு கிலோ 8 கிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ள துடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (6-8)

# நெற்பயிர்களை அழிக்கும் கட்டாக்காலி மாடுகள்

## நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

(சாவகச்சேரி)

கைதடி கமநலசேவை நிலைய எல்லைப் பரப்பிற் குட்பட்ட தனங்கிளப்பு வயல் பகுதியில் நெல் அறுவடை தற்போது இடம்பெற்று வரு கின்ற நிலையில் கட்டாக் காலி மாடுகளின் வருகை அதிகரித்திருப்பதால் விவ சாயிகள் பெரும் பயிர் அழி விற்கு முகம்கொடுத்து வரு கின்றனர்.

ஏற்கனவே தொடர் மழை மற்றும் வெள்ளம் காரணமாக நெற்பயிர்கள் அழிவடைந்த நிலையில் விவசாயிகள் விளைந்த நெல்லை அறுவடைசெய்து வருகின்றனர்.

இருப்பினும் கட்டாக் காலி மாடுகள் அறுவடை செய்யத் தயாராக இருக்கும் நெற்பயிர்களை அழித்து விடுகின்ற நிலை காணப் படுகின்றது.

தனங்கிளப்பில் நெல் அறுவடை நிறைவு பெற்ற தும் சிறு தானியங்களை விதைத்து அதனூடாக இலாபம் அடையக் கூடிய ஈரலிப்பு வயல் நிலங்கள் உள்ள போதிலும் கட்டாக் காலிகளின் தொல்லையால் விவசாயிகள் சிறுதானியச் செய்கையை தவிர்த்து வரு கின்றனர்.

இது தொடர்பில் சம்பந் தப்பட்ட அதிகாரிகள் கவன மெடுத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6-8-30)



தெல்லிப்பழை கூட்டுறவு மருத்துவமனையின் சேவை நிலையம் இல. 611, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் மாலை வடக்கு மாகாண ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு காலத்தில்

## அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடிவு

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மற்றும் சிங்களப் புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது குறித்து முக்கிய கவனம் செலுத்துவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும் புத்தாண்டு காலத்தில் தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களைத் தொடர்ச்சியாக விநியோகிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் ஜனாதிபதி அலுவலகத்தில் இரண்டாவது முறையாகக் கூடி உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான கொள்கை, தீர்மானங்களை எடுப்பது தொடர்பிலும் தீர்க்கமாக ஆராய்ந்துள்ளனர்.

நெல் கொள்வனவு குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது. நெல் கொள்வனவுக்காக ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் கடன் வசதிகளின் கீழ் கொள்வனவு செய்யப்படும் நெல்லின் அளவைக் கண்காணிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டின் பல அத்தியாவசிய நுகர்வோர் பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## மின்வெட்டு தொடர்பில் இறுதித் தீர்மானம் இன்று

### இலங்கை மின்சார சபை அறிவிப்பு

(கொழும்பு)

**மின்வெட்டு தொடர்ந்து அமுல்படுத்தப்படுமா? இல்லையா? என்பது தொடர்பில் இன்று காலை அறிக்கை வெளியிடவுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.**

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தைப் புனரமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வரும் நிலையில், மேலும் மின்வெட்டு அமுல்படுத்தப்படுமா? இல்லையா? என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் இதன்போது எட்டப்படும் என இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் தம்மிக்க விமலரத்ன குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்தடையை மீட்டெடுக்கும் வேளையில் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட பிரச்சினையின் விளைவாக கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களும் நாடளாவிய ரீதியில் சுழற்சி முறை மின்வெட்டை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி பிற்பகல் 03.30 மணி தொடக்கம் இரவு 09.30 மணி வரையான காலப் பகுதியில் சுழற்சி முறையில் நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு பகுதிகளிலும் 90 நிமிட மின் வெட்டினை அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-8)

## புனித ஹஜ் யாத்திரை; குழந்தைகளுக்கு அனுமதியில்லை

### சவூதி அரேபியா தீர்மானம்

(ஜெர்த்தா)

புனித ஹஜ் யாத்திரைக்கு இம்முறை குழந்தைகளை அனுமதிப்பதில்லை என சவூதி அரேபிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஹாஜிகளின் பாதுகாப்பு மற்றும் நெரிசலில் சிக்குவதைத் தவிர்த்தல், இன்னும் இட நெருக்கடி நிலைமைகளை இல்லாமலாக்கல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் சவூதி அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில் 2025 ஆம் ஆண்டில் புனித ஹஜ் பயணத்துக்காக சவூதி அரேபியாவுக்கு வரும் ஹஜ் யாத்திரிகள் இப் புதிய விதி முறையைப் பின்பற்ற வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் மற்றும் தீப் பிடித்தல் எனத் திடீரென ஏற்படும் அவசர நிலைகளில் படையினர் துரிதமாகச் செயற்படும் பொருட்டும் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (நி-8)

இலங்கையில் முதன்முறையாக!
வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!
UK மாணவர் வீசா - உங்கள் கனவை நனவாக்குங்கள்!
14.02.2025 - 17.02.2025
No. 158, Hospital Road, Jaffna
✔100% இலவச சேவை (100% Free Student Visa Service)
✔க.பொ.த (O/L) ஆங்கிலத்தில் C சித்தி போதுமானது (IELTS Waivers)
UK-க்கு மாணவர் வீசாவில் உங்கள் குடும்பத்தையும் IELTS & Proposal இல்லாமல் அழைத்துச் செல்லலாம்!
£10,000 (Scholarships)


100% FREE SHOW MONEY
DREAM DESTINATION Your Travel Partner
077 129 2638 / 076 822 2022 / 021 222 2893
(3354)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் பகுதி - II

20

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

16 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் மது வகைகள் விற்கப்படுவதை அது தடுக்கலாம்.

இவ்வாறாக ஓர் கிராமச் சங்கம் தனது மக்களின் சமுதாய வாழ்க்கையை அபிவிருத்தி செய்யவும் சிறந்ததான ஓர் சமுதாயச் சூழ்நிலையை ஏற்படுத்தவும் தன்னாலியன்றவரை தொண்டாற்றும் ஓர் நற்சமுதாயத்தின் புற நிலைகளை வகுத்துப்பேண ஓர் கிராமச் சங்கத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பது மேலே காட்டிய விபரங்களில் இருந்து புனாகிறது.

அரசாங்கம் என்பது பிரஜைகளின் நன்மைக்கான ஒரு சங்கம் அல்லது கூட்டுறவே என்ற சன நாயகக் கொள்கைக்கிணங்க ஓர் சமூகத்தின் புற நிலைமைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கிராமச் சங்கத்துக்கு வழங்கப்பட்டிருந்தது.

இவ்வளவுடன் -அதாவது மக்களுக்கான புற நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதுடன் கிராமச் சங்கத்தின் அதிகாரங்கள் நின்றுவிடுகின்றன. மக்களின் அபிப்பிராயங்கள், நம்பிக்கைகள், கொள்கைகள், சம்பிரதாயங்கள் என்பவற்றின் மீது அதற்கு அதிகாரம் கிடையாது. இவற்றின் மீதும் அதிகாரம் கொடுத்தால் அது சனங்களின் வாழ்க்கையில் சர்வாதிகாரம் செலுத்த ஏதுவாகும்.

கிராம்ச் சங்கமும் அரசாங்கத்தைப்போல சமுதாயத்தில் ஓர் அங்கமேயாகும். ஆகவே சில கருமங்களிற்றான் அதற்கு அதிகாரமுண்டு.

தன் பரிபாலனத்தில் விடப்பட்டுள்ள கருமங்களை நிருவகிப்பதற்குப் பிரமாணங்களை வகுக்கவும் ஓர் கிராமச் சங்கத்துக்கு அதிகாரமுண்டு. தன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அதற்கு (அ) பணம் (ஆ) தான் சட்டபூர்வமாக வகுத்துள்ள பிரமாணங்களுக்கு மக்களைக் கீழ்ப்படியச் செய்வதற்கான அதிகாரம் என்பன வேண்டும்.

பணம் சேகரித்து, அதனைத் தான் அங்கீகரித்த கருமங்களுக்குச் செலவழிக்க ஓர் கிராமச் சங்கத்துக்கு அதிகாரம் உண்டு. அது தனக்கு வேண்டிய பணத்தைப் பின்வருமாறு பெறும்:-

**வரிகள் மூலம்**

(அ) ஆயக்குத்தகை (ஆ) தலைவரி (இ) நிலவரி அல்லது காணி வரி (ஈ) உத்தரவுப் பத்திரவரி (லைசென்ஸ்) (உ) வாகனங்கள், மிருகங்கள் மீது வரி. இவ் வரிகள் பற்றி சற்று விபரமாகப் பார்ப்போம்

தலைவரி என்பது கிராமத்தில் வாக்குரிமையுள்ள ஒவ்வொரு ஆடவனும் இறுக்கவேண்டிய வரியாகும். இதனைக் கிராமச் சங்கத் தொழில்கள் சம்பந்தமாக ஒருவர் சரீரத்தாற் பிரயாசைப்பட்டும் இறுக்கலாம்: அதாவது பணமாக வரியை இறுப்பதற்குப் பதிலாகச் சரீர உழைப்பைக் கொடுக்கலாம்.

நிலவரி அல்லது காணிவரி பின்வருவனவற்றில் ஒன்றாக அல்லது இரண்டும் சேர்ந்தனவாக இருக்கும்.

(அ) கிராமத்தில் உள்ள சகல கட்டடங்கள், நிலங்கள் என்பவற்றின் ஆண்டு மதிப்பில் 100இற்கு 4 விகிதத்துக்கு மேற்படாத ஓர் வரி.

(ஆ) கிராமச்சங்க எல்லைக் குட்பட்டு நெற்செய்கை அல்லது சேனைச் செய்கையில்லாது பணப் பெருக்கத்துக்கான பயிர்கள் நிரந்தரமாக அல்லது ஒழுங்காகச் செய்யப்படுவதாயுள்ள ஒவ்வோர் ஏக்கருக்கும் ஆண்டுக்கு 50 சதத்துக்கு மேற்படாத ஓர் ஏக்கர் வரியாகும்.

இவ்வாறாகச் சேகரிக்கப்படும் பணம் சமூக நிதி என வழங்கப்படும். கிராமச் சங்கத்தலைவர் அல்லது உபதலைவர் கையொப்பமிட்ட உத்தரவினாலன்றி அப்பணத்தில் எப்பகுதியேனும் செலவழிக்கப்படமாட்டாது.

ஒரு கிராமச் சங்கத்தின் கணக்குகள் அரசாங்கக் கணக்குப் பரிசோதனை அதிகாரியினால் அல்லது அவரின் பிரதிநிதியான ஓர் உத்தியோகத்தரினால் ஆண்டுதோறும் பரிசோதனை செய்யப்படும். சமூக நிதி பற்றிய சட்டங்களை இயற்றுவதற்கும், அந் நிதியைச் செலவழிப்பதற்கும் உரிய அதிகாரம் முழுவதும் பின்வருவனவுக்கமைவாக இருக்கும்:-

(அ) வரி அல்லது குத்தகை வரி அல்லது உத்தரவுப் பத்திரவரி (லைசென்ஸ்) என்பவற்றில் எதனை யாவது விதிக்கவேண்டும் என்று கிராமச் சங்கம் செய்யும் தீர்மானம் அல்லது நிர்ணயம் ஒவ்வொன்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(ஆ) கிராமச் சங்கம் செய்யும் தீர்மானம் அல்லது நிர்ணயம்:

1. ஏதும் காணியை அல்லது கட்டடத்தை விலைக்கு வாங்குதல் அல்லது விற்பனை செய்தல் அல்லது மாற்றிக்கொள்ளல்,

2. சங்கத்திற் பொறுப்பிக்கப்பட்டுள்ள அசைவற்ற ஆதனத்தைக் குத்தகைக்கு விடல்,

3. சங்கத்துச் சேவையின் பொருட்டு வேதனம் பெறும் உத்தியோகத்தை ஆக்கல்,

4. சமூக நிதியிலிருந்து 100.00 ரூபாவுக்கு மேற்பட்ட தொகையைச் செலவு செய்தல்,

5. 100.00 ரூபாவுக்கு மேற்பட்ட ஓர் ஒப்பந்தம்,

6. கஷ்ட நிவாரணத்தின் பொருட்டேனும் தருமம் அல்லது கல்வி விருத்தி போன்ற வேறேதும் கைங்கரியத்துக்கேனும் அளிக்கப்படும் நன்கொடைகள்,

என்பவைபற்றியதெனில் அப்படியான ஒவ்வொரு விடயமும் அரசாங்க அதிபரால் அங்கீகரிக்கப்பட்டு பின்னர் உள்ளூராட்சிப்பகுதி அமைச்சரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

கிராமச்சங்கப் பரிபாலனம் விடயமாக, மேலே காட்டிய விதத்தில் சில கட்டுப்பாடுகள் இருப்பது விரும்பத்தக்கது என்று கூறலாம். சில சமயங்களில் கிராமச் சங்கத்து அங்கத்தவர்கள் அதி மிஞ்சிய உற்சாகத்தினால், கிராமம் தாங்க முடியாத செலவுத் திட்டங்களை வகுக்கவும் கூடும். இவ்வாறு வகுத்துப் பின்னர் இடர்ப்படுவதைத் தடுக்கவே இக்கட்டுப்பாடுகள் உள.

தான் நிறைவேற்றும் சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் மீறுபவர்களை விசாரணை செய்து தண்டிப்பதற்கான அதிகாரமும் கிராமச்சங்கத்திடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. தானிடும் கட்டளைகளுக்கு மக்களை கீழ்ப்படியச் செய்யும் அதிகாரம் கிராமச் சங்கத்துக்கு இல்லாவிட்டால், கிராமப் பரிபாலனத்தை அது செவ்வனே நடாத்த முடியாது. கிராமத்தில் ஒழுங்கு, அமைதி என்பவையும் நிலவமாட்டாது.

**இலங்கையின் கிராமக்கோடு**

கிராமக் கோடு என்பது இலங்கையின் கிராம நிர்வாகத்துடன் தொடர்புடைய ஒரு சட்டமாகும். 1924 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க கிராமச் சங்கச் சட்டத்தின் கீழ் இது உருவாக்கப்பட்டது. இச் சட்டம் கிராம மட்டத்தில் நிர்வாக அமைப்புகளை ஒழுங்குபடுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது.

“கிராமக் கோடு” என்று சாதாரணமாக வழங்கப்படும் கிராம நீதித்தலம் என்ற ஓர் தாபனம், கிராமச் சமூகத்தின் நன்மைக்காக ஏற்பட்டிருந்தது. ஒரு கிராமப் பகுதிக்கு நீதித்தலம் நிறுவமுன், அது பற்றிய ஒரு பிரகடனத்தை அரசாங்கம் முதலிற் செய்யும். பின்னர் அந்த நீதித்தலத்துக்கென ஓர் தலைவரை அது நியமிக்கும். இத்தலைவர் ‘கிராமக் கோட்டு நீதவான்’ என்று சாதாரணமாக வழங்கப்படுவார்.

இவருக்குரிய வேதனத்தை மத்திய அரசாங்கமே உதவும். அவரின் நீதிபரிபாலன வேலையில் அவருக்கு உதவிசெய்ய மூன்று ஆலோசகர் இருப்பர். அவர் ஒரு வழக்கை விசாரணை செய்து அது சம்பந்தமான தீர்ப்பை அளிக்க முன்னர் தமது ஆலோசகர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டும். தீர்ப்பு விடயத்தில் அவர்களுக்கும் தலைவர்க்குமிடையே உடன்பாடு இல்லாவிட்டால், தலைவர் தம்முடைய எண்ணப்படிக்கே தீர்ப்பை அளிக்கவேண்டும்.

ஆனால் இந்த அபிப்பிராய பேதத்தை அவர் பதிவுசெய்து கொள்ளுதல் வேண்டும். அப் பதிவில் அபிப்பிராயபேதம் கொண்டுள்ள ஆலோசகர்களும் கையொப்பம் இடுதல் வேண்டும்.

கிராம நீதித்தலத்தில் தமிழ் அல்லது சிங்களத்தில் தான் கருமங்கள் ஆற்றப்படும். ஆனால் அங்குள்ள பதிவுகள், சாதனங்கள் என்பவற்றை ஆங்கிலத்தில் எழுதி வைத்திருக்கலாம். கிராம நீதித்தலத்தில் நியாயாதிக்கத்துக்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது.

20.00 ரூபாய் தொடக்கம் 100.00 ரூபாய் வரையுள்ள கடன், நட்டம், கேள்வி என்பனபற்றிய விடயமானதாகவே அதன் விசாரணை அதிகமாக இருக்கும். இப்படியான அற்ப விடயங்களில் கிராமங்களில் பிணக்கு ஏற்படுதல் சாதாரணம். இவற்றைத் தீர்க்க, கிராமவாசிகள் பட்டணத்து நீதித்தலங்களுக்குப் போவதென்றால் அவர்களுடைய காலமும், பணமும் விரயமாகிவிடும்.

எனவே அவர்களின் சௌகரியத்தின் பொருட்டே கிராம நீதித்தலங்களில் ஏற்பாடுகள் இருந்தன. இந்நீதித் தலங்களில் அப்புக்காத்து, பிறக்கிராசி என்று சொல்லப்படும் பிரதிநிதிகள் வாதிக்க முடியாது. கட்சிக்காரர் தாமாக வெளிப்படுத்தும் வாதப் பிரதிவாதங்களை நீதவானுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிடப்பட்ட நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய தீர்மானம்

(கொழும்பு)

கடந்த அரசாங்கங்களின் காலத்தில் இடைநடுவே கைவிடப்பட்ட வேலைத்திட்டங்களின் நிர்மாணப்பணிகளை நிறைவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்திற்குட்பட்ட பல பிரதேச மட்டங்களில் இத்தகைய வேலைத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் துறைசார் பிரதியமைச்சர் ருவன் செனவிரத்ன தெரிவித்தார்.

பாலங்கள், வளைவுகள் மற்றும் கிராமப்புற வீதிகள் உள்ளிட்ட பல வேலைத்திட்டங்கள் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த வேலைத் திட்டங்களுக்கான நிர்மாணப்பணிகள் உரிய திட்டமிடலின்றி ஆரம்பிக்கப்பட்டமையினால் அவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டிலும் சிக்கல் எழுந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

வேலைத்திட்டங்கள் முடிவுறுத்தப்படாமையினால் அவற்றின் பலனை பெற்றுக்கொள்ளவிருந்த மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதியமைச்சர் ருவன் செனவிரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக ஆராய்ந்து எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக இடைநடுவே கைவிடப்பட்ட அனைத்து வேலைத் திட்டங்களையும் நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

# புற்றுநோய்க்கான சிகிச்சைக்கு இலங்கையே சிறந்தது

## மஹரகம வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் தெரிவிப்பு

**(கொழும்பு) நாட்டில் குழந்தைப் பருவப் புற்றுநோயைக் குணப்படுத்தும் திறன் உயர் மட்டத்தில் உள்ளதாக மஹரகம தேசியப் புற்றுநோய் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் வைத்தியர் மகேந்திர சோமாதிலக்க தெரிவித்துள்ளார்.**

தெற்காசியாவில் உள்ள ஏனைய நாடுகளை விட இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளில் புற்றுநோயைக் குணப்படுத்தும் திறன் உயர் மட்டத்தில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஆரம்பத்தில் புற்றுநோயைக் கண்டறிவதன் மூலம் விரைவில் குணப்படுத்த முடியும்.



அடிக்கடி காய்ச்சல் ஏற்படுதல் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருத்தல் கணுக் கால் வீக்கம் ஏற்படுதல் என்பன புற்று நோய்க்குரிய ஆரம்ப அறிகுறிகள் எனவும் வைத்தியர் தெரிவித்துள்ளார். (நி-8)


# சேவைநலன் பாராட்டு

## திருமதி. யேசுதாசன் மரியப்பிள்ளை

(Bachelor of Arts, Dip in Counselling, Dip in Social Care Centre)

**சிரேஸ்ட சமூக சேவை உத்தியோகத்தர், மன்னார்**

35 வருட கால அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் சேவையாளர் அம்மணி **திருமதி.யேசுதாசன் மரியப்பிள்ளை**, மக்கள் சேவையினை பக்குவமாய் ஆற்றிய தங்கள் ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**சேவைக்கால விபரம்**

**சமூக சேவை உத்தியோகத்தர்**

+ 01.11.1989-31.12.1989 மாவட்டச் செயலகம், திருகோணமலை
+ 01.01.1990-16.04.2006 பிரதேச செயலகம், நானாட்டான்
+ 17.04.2006-10.08.2006 பிரதேச செயலகம், மாந்தை மேற்கு
+ 11.08.2006-29.05.2008 பிரதேச செயலகம், நானாட்டான்

**மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்**

+ 30.05.2008-31.01.2013 மாவட்டச் செயலகம், மன்னார்
+ 01.02.2013-13.05.2024 மாவட்ட சமூக சேவை அலுவலகம், மன்னார்



*வாழ்த்துவோர்:-* (3401)

**வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம்**

# சேவைநலன் பாராட்டு

## திரு. சீவரத்தினம் நிரோஷன்

(Bachelor of Business Administration)

**சமூக சேவை உத்தியோகத்தர், வெங்கலச்செட்டிக்குளம்**

கணக்காய்வு உத்தியோகத்தராகப் பதவியுயர்வு பெற்றுச் செல்லும் **திரு.சீவரத்தினம் நிரோஷன்** அவர்கள் மென்மேலும் தனது வாழ்வில் உயர்ச்சி பெற வாழ்த்துகின்றோம்.



**சேவைக்கால விபரம்**

+ (16.08.2021-26.01.2025), பிரதேச செயலகம், வெங்கலச்செட்டிக்குளம்
+ (04.05.2023-26.01.2025), பிரதேச செயலகம், (வவுனியா தெற்கு) (பதிற்கடமை)

Best Wishes!

*வாழ்த்துவோர்:-* (3401)

**வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம்**

# சேவைநலன் பாராட்டு

## திரு. பரஞ்சோதி பரதன்

(Bachelor of Business Administration)

**சமூக சேவை உத்தியோகத்தர், மருதங்கேணி**

மகத்தான ஆசிரியப் பணியை மேற்கொள்ளச் சென்றிருக்கும் **திரு.பரஞ்சோதி பரதன்**, அவர்கள் தனது சேவையில் மேலும் உயர்ச்சி பெற வாழ்த்துகின்றோம்

**சேவைக்கால விபரம்**

07.06.2021-07.06.2024 பிரதேச செயலகம், மருதங்கேணி



Best Wishes!

*வாழ்த்துவோர்:-* (3401)

**வடமாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்

# பொன்னியின் செல்வன் 701

காவியத்தொடர் பாகம் -III





நல்ல சித்தப்பிரமை பிடித்து உன்னை ஆட்டுகிறது! சூடாமணி விஹாரத்துப் புத்த பிக்குகளிடம் சொல்லித்தான் உன் சித்தப்பிரமையைப் போக்க வழி தேட வேண்டும்! போனால் போகட்டும் நீ இப்போது தூங்கு! எனக்கும் தூக்கம் வருகிறது. இந்த ஆடும் குன்றின் மீது உட்கார்ந்தபடியேதான் இன்று இரவு நாம் தூங்கியாக வேண்டும்" என்றாள் இளைய பிராட்டி.

வானதி இனி ஒன்றும் பேசக்கூடாது என்று தீர்மானித்து மௌனமானாள். அவளுடைய உள்ளம் ஒரே குழப்பமாயிருந்தது. அன்று நடந்ததையெல்லாம் ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்துக் கொண்டாள். எல்லாம் உண்மையாக நிகழ்ந்த சம்பவங்களாகவே தோன்றின. 'எனக்குச் சித்தப் பிரமை ஒன்றுமில்லை அக்காதான் என்னைப் பைத்தியமாக அடிக்கப் பார்க்கிறாள்' என்று சில சமயம் எண்ணினாள். யானை தன்னைத் துதிக்கையினால் சுற்றித் தூக்கிய பிறகு என்ன நடந்தது என்பதை எண்ணி எண்ணிப் பார்த்தாள். ஒன்றும் நினைவுக்கு வரவில்லை. என்னதான் நடந்திருக்கும்? தன் உயிருக்கே ஆபத்தான அந்த வேளைக்கு அக்கா சரியாக அங்கே வந்து தன்னைக் காப்பாற்றியிருக்க வேண்டும்.

அக்காவைப் பார்த்ததும், முதன் மந்திரி நடுநடுங்கிப் போயிருக்க வேண்டும். ஆயினும் யானைத் துதிக்கையின் பிடியிலிருந்து காப்பாற்றுவது என்பது அவ்வளவு சுலபமான காரியமா? ஒரு வேளை இவ்வாறு இருக்குமோ? தன்னைத் துதிக்கையால் கட்டித்தூக்கிய யானைதானா இது? மேலே அம்பாரி இருந்தது. அந்த இருட்டிலும் சிறிது தெரிந்தது. இளையபிராட்டி அந்த அம்பாரியிலேயே இருந்திருக்கலாம். யானை துதிக்கையினால் தூக்கித் தன்னைத் தூர எறிவதற்குப் பதிலாக மேலே அம்பாரியில் விட்டிருக்கக் கூடும். அந்த மாதிரி செய்ய யானைகள் பழக்கப்பட்டிருப்பதை வானதி பலமுறை பார்த்ததுண்டு.

முதன் மந்திரியும், இளைய பிராட்டியும் சேர்ந்து இம்மாதிரி சூழ்ச்சி செய்திருக்கிறார்களோ? எதற்காக? நான் தனியாகப் பிரயாணம் செய்வதைத் தடுக்கும் பொருட்டுத்தான். என்னுடைய தைரியத்தைச் சோதிப்பதற்காகவும் இளைய பிராட்டி இம்மாதிரி செய்திருக்கலாம். பொம்மை முதலையை என் அருகிலே விட்டு ஒரு சமயம் சோதனை செய்யவில்லையா? எப்படியாவது இருக்கட்டும் நான் இன்று தனி வழியே புறப்பட்டது பெருந்தவறு.

இப்போது அக்காவின் மடியில் தலையை வைத்துப் படுத்திருப்பது எவ்வளவு நிம்மதியாயிருக்கிறது. அக்காவின் வார்த்தைகள் எவ்வளவு தைரியமும் உற்சாகமும் அளிக்கின்றன! பொன்னியின் செல்வன் எங்கேயோ பத்திரமாகயிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. ஒருவேளை இந்தப் பிரயாணத்தின் முடிவில் அவரைச் சந்திப்போமா? இவ்வாறு எண்ணியபோது வானதியின் உள்ளத்தில் அளவில்லாத கிளர்ச்சி ஏற்பட்டது. மனச்சோர்வுக்கு நேர்மாறான உற்சாக இயல்பு இப்போது அவளை ஆட்கொண்டது.

யானை கம்பீரமாக நடந்து சென்று கொண்டிருந்தது. யானைமேல் அம்பாரி ஆடி அசைந்து கொண்டிருந்தது. முன்னும் பின்னும் காவற்படைகள் போய்க் கொண்டிருந்தன. மழை சிறு தூறலாயிற்று, பிறகு தூறலும் நின்றது. வானத்தில் மேகக் கூட்டங்கள் சிதறிக் கலைந்தன. நட்சத்திரங்கள் எட்டிப் பார்த்தன.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## மணி ஓசையும் மக்கள் அச்சமும்



ஒரு கிராமத்தின் எல்லையில் ஒரு காடு இருந்தது. கிராமத்திலிருந்த ஒரு கோவிலில் உள்ள கதவில் ஒரு வெள்ளி மணி கட்டப்பட்டிருந்தது. ஒரு நாள் ஒரு திருடன் மணியைத் திருடிக் கொண்டு காட்டிற்குள் ஓடி விட்டான். ஆனால் துரதிஷ்டவசமாக, அன்றே அவனை ஒரு புலி கொன்று தின்று விட்டது.

கோவிலுக்குச் சொந்தமான வெள்ளி மணி காணாமல் போனதில் கிராம மக்கள் மிகவும் வருத்தம் அடைந்தனர். அன்று இரவு அந்த மணி அடிக்கும் சத்தம் கேட்டது. பல பக்கங்களிலிருந்தும் மணி ஓசை கேட்பது போல் அவர்களுக்கு தோன்றியது. இதைக் கேட்டு அம் மக்கள் பயந்துவிட்டனர். கோவில் மணியைத் திரும்பப் பெறுவதற்கு கிராம மக்கள் எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை என்று கோவிலில் இருந்த தெய்வம் கோபித்துக் கொள்வதாக அந்த மக்கள் எண்ணி பயந்து போனார்கள்.

மறுநாள் கிராம மக்கள் சிலர் மணியைத் தேடி காட்டிற்குள் சென்றனர். ஆனால் மணி எங்கிருக்கிறது என்பதை அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை ஊருக்குத் திரும்பினர்.

அந்த இரவும் அவர்களுக்கு மணியோசை கேட்டது. ஒருமுறை ஒரு திசையில் இருந்தும் அடுத்த முறை வேறு திசையில் இருந்தும் மணியோசை கேட்பது போல் அவர்களுக்கு தோன்றியது. உண்மையிலேயே அந்த மக்கள் மிகவும் நடுங்கிப் போனார்கள்.

மறுநாள், அந்த கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன், உண்மையில் என்னதான் நடக்கிறது என்பதை கண்டறிய காட்டிற்குப் புறப்பட்டான். தனியாக காட்டிற்குள் சென்றான். சிறிது நேரத்திற்கு பிறகு முரசு அடிக்கும் சத்தமும் மணியோசையும் கேட்டது. அவன் தைரியமாக சத்தம் வந்த திசையை நோக்கிச் சென்றான். அங்கு ஒரு குரங்குக் கூட்டம் ஒரு முரசு, ஒரு மணி, சில உடுக்குகள் இவற்றை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருப்பதை கண்டான்.

குரங்குதான் மணியை அடித்து ஓசையை எழுப்பி இருக்கிறது. மரத்திற்கு மரம் தாவுவதால் மணியோசை வெவ்வேறு திசைகளில் இருந்து கேட்கிறது என்பதையும் சிறுவன் உணர்ந்து கொண்டான். அவன் அங்கேயே பொறுமையாகக் காத்துக் கொண்டிருந்தான். ஒரு குரங்கு மணியை வைத்து விளையாடியவாறே அந்தக் கூட்டத்தில் இருந்து பிரிந்து வந்து ஒரு மரத்தில் உட்கார்ந் தது.

இதற்காகக் காத்திருந்த சிறுவன், குரங்கின் எதிரே சில பழங்களையும் கொட்டைகளையும் வீசி எறிந்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு குரங்கு பழங்களையும் கொட்டைகளையும் பார்த்தது.

அவற்றை எடுப்பதற்காக மரத்திலிருந்து இறங்கியது. ஆனால், நிறையப் பழங்களும் கொட்டைகளும் இருக்கவே, மரத்திலேயே மணியை வைத்தது. இறங்கி வந்து அவற்றைப் பொறுக்க ஆரம்பித்தது.

இந்தச் சமயத்திற்காக காத்திருந்த சிறுவன் விரைந்து சென்று மணியை எடுத்துக் கொண்டான். கிராமத்திற்கு ஓடி வந் தான். காட்டில் உண்மையில் என்ன நடந்தது என்பதை கிராம மக்களிடம் விபரமாக எடுத்துக் கூறினான். சூழலை உணர்ந்து சிந்தித்துச் செயற்பட்ட சிறுவனை அனைவரும் பாராட்டினார்கள்.

நீதி: பகுத்தறிவு விளக்கை ஏற்று, மூட நம்பிக்கை இருளை ஓட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## உள்நாட்டுப் போர் காரணமாக சூடானில் மனிதாபிமான நெருக்கடி

### ஆபிரிக்க ஒன்றியம் தெரிவிப்பு

(சூடான்)

**உள்நாட்டுப் போர் காரணமாக சூடானில் உலகிலேயே மிக மோசமான மனிதாபிமான நெருக்கடி உருவாகியுள்ளது என்று ஆபிரிக்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.**



சூடான் இராணுவ அரசாங்கத்துக்கும் துணை இராணுவ விரைவு ஆதரவுப் படைகளுக்கும் இடையில் இடம் பெற்று வரும் மோதல்களால் இந்நிலை உருவாகியுள்ளதாகவும் அந்த ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆபிரிக்க ஒன்றியத்தின் உயர் மட்டக் குழுத் தலைவர் முஹம்மத் இப்னு சாம்பஸ் மேற்கண்டவாறு எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதோடு இப்போர் அச்சுறுத்தலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்கு தடையாக அமைந்துள்ளது. உணவு பற்றாக்குறையையும் பட்டினியையும் அதிகரித்துள்ளது. குழந்தைகளும் பெண்களும் தொடர்ந்தும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகிறார்கள். முதியவர்களுக்கும் நோயாளர்களுக்கும் மருத்துவ உதவி இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்

சூடானில் 2023 ஏப்ரலில் உள்நாட்டு போர் வெடித்தது. அதன் விளைவாக சுமார் 12 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இலட்சக் கணக்கான குழந்தைகள் தற்போது போஷாக்கின்மைக்கு உள்ளாகியுள்ளதாக ஆபிரிக்க ஒன்றிய அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (நி-8)

## லஞ்ச ஊழல் குறைந்த நாடுகள் வரிசையில் முன்னேறிய சிங்கப்பூர்

(சிங்கப்பூர்)

லஞ்ச ஊழல் குறைந்த உலக நாடுகளின் பட்டியலில் சிங்கப்பூர் 3 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

உலக அளவில் லஞ்ச ஊழல் விவகாரங்களைக் கண்காணிக்கும் 'டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்' அமைப்பு வெளியிட்டுள்ள கடந்த ஆண்டுக்கான லஞ்ச ஊழல் கண்ணோட்டக் குறியீட்டு அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய பசிபிக் வட்டாரத்தில் லஞ்ச ஊழல் குறைந்த நாடாக இருந்த நியூசிலாந்தைப் பின்னுக்குத் தள்ளி சிங்கப்பூர் முன்னேறியுள்ளது. கடந்த 2010 ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்தப் பட்டியலில் சிங்கப்பூர் முதலிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் உலக அளவில் 180 நாடுகளில் மூன்றாம் இடத்துக்கு சிங்கப்பூர் வந்திருப்பது, 2020ஆம் ஆண்டிலிருந்து அது அடைந்திருக்கும் ஆக உயர்ந்த தரநிலை எனவும் டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு சிங்கப்பூர் ஐந்தாம் இடத்தில் இருந்தது. கடந்த 2012ஆம் ஆண்டு, உலக அளவில் 100 இற்கு 87 புள்ளிகளைப் பெற்று ஆகச் சிறந்த நிலையை சிங்கப்பூர் அடைந்திருந்தது.

இம்முறை சிங்கப்பூர் 100 இற்கு 84 புள்ளிகளைப் பெற்றதன் மூலம் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இதேவேளை உலகப் பட்டியலின் முதலிடத்தில் டென்மார்க் தொடர்ந்து ஏழாவது ஆண்டாக நீடிக்கிறது. 100 இற்கு 90 தரப் புள்ளிகளை அது பெற்றுள்ளது.

அதற்கு அடுத்த நிலையில் 88 புள்ளிகளுடன் பின்லாந்து வந்துள்ளது. சிங்கப்பூருக்கு அடுத்து, 82 புள்ளிகளுடன் நான்காம் இடத்தை நியூசிலாந்தும் 81 புள்ளிகளுடன் ஐந்தாம் இடத்தை லக்சம்பர்க்கும் பிடித்துள்ளன. (நி-8)

## ரஷ்யாவிற்கான ஆதரவு தொடரும் மீண்டும் உறுதியளித்த வடகொரியா



(பியாங்யாங்)

உக்ரைன்-ரஷ்யா போரில் ரஷ்யாவுக்குத் தனது நாட்டின் ஆதரவு தொடரும் என்று வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங்-உன் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

உக்ரைன்-ரஷ்யா இடையிலான போர் நடவடிக்கையில் ரஷ்யாவுக்கு ஆதரவாக சுமார் 11,000 வீரர்கள் போரின் முன்கள வரிசைக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

ஆனால் முன்பு கடுமையான இழப்புகள் காரணமாக அவர்கள் திரும்பப் பெறப் பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் ரஷ்யாவின் இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப் பாட்டைப் பாதுகாப்பதற்கான நீதியான காரணத்தை வட கொரியா தொடர்ந்து ஆதரிக்கும் என்று வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங்-உன் மீண்டும் உறுதிபடுத்தியுள்ளார்.

மேலும் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென் கொரியா இடையே அதிகரித்து வரும் இராணுவ ஒத்துழைப்புக் குறித்து கவலைகள் எழுந்துள்ள நிலையில் வட கொரியா தனது அணு ஆயுதத் திறன்களை மேலும் மேம்படுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில், ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தில் வட கொரிய துருப்புகள் மீண்டும் முன்னிலை போர்க்களத்திற்கு திரும்பியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி உறுதிப்படுத்தியுள்ளார்.

தென் கொரியப் பாதுகாப்பு அமைச்சகத்தின் தகவல்களின்படி, வட கொரியா சுமார் 200 நீண்ட தூர பீரங்கிப் படைகளை ரஷ்யாவுக்கு அனுப்பியுள்ளதாகக் கூறப்படுகிறது.

எதிர்காலத்தில் வட கொரியா கூடுதல் வீரர்கள், ஆயுதங்கள் மற்றும் பொருட்களை அனுப்பக்கூடும் என்ற சாத்தியமும் இருப்பதாக தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## சட்டவிரோத குடியேறிகளை நாடு கடத்தும் ட்ரம்ப்

### கண்டனம் வெளியிட்ட போப் பிரான்சிஸ்



(வத்திகாகன்)

சட்டவிரோத குடியேறிகளை நாடு கடத்தும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்திற்கு கத்தோலிக்கத் திருச்சபை தலைவரான போப் பிரான்சிஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மெக்சிக்கோ மற்றும் கனடா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோதமான வகையில் புலம்பெயர்ந்து அமெரிக்காவிற்குள் செல்கின்றனர்.

இதுபோன்ற சட்டவிரோத குடியேறிகளுக்கு எதிராக ட்ரம்ப் தலைமையிலான புதிய அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதனடிப்படையில், அவர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

இந்தியா, கனடா, [illegible] உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சட்டவிரோத குடியேறிகளைக் கண்டறிந்து அவர்களை அவர்களது சொந்த நாட்டிற்கு அமெரிக்க அரசு அனுப்பி வருகின்றது.

இந்தநிலையில் சட்டவிரோத குடியேறிகளை நாடு கடத்தும் ட்ரம்ப் நிர்வாகத்திற்கு கத்தோலிக்கத் திருச்சபை தலைவரான போப் பிரான்சிஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக போப் பிரான்சிஸ் அமெரிக்க பாதிரிகளுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். குறித்த கடிதத்தில் இந்த நடவடிக்கை புலம்பெயர்ந்தோரின் கண்ணியத்தை பாதிக்கிறது எனவும் மற்றும் இது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

போர், வறுமை மற்றும் காலநிலை பேரழிவுகளில் இருந்து தப்பிச் செல்பவர்களைப் பிற நாடுகள் வரவேற்று பாதுகாக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வரும் போப் ஆண்டவர், அரசாங்கங்கள் தங்கள் திறன் வரம்பிற்கு ஏற்றவாறு இதனைச்செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விளையாட்டுச் செய்திகள்

## சம்பியன்ஸ் டிராபி தொடர் இந்திய அணியில் பும்ரா நீக்கம்

2025 ஐ.சி.சி ஆண்கள் சம்பியன்ஸ் டிராபிக்கான அணியில் இருந்து இந்திய முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக ஹர்ஷித் ராணா அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு இறுதியில் அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும் போது காயமுற்ற ஜஸ்பிரித் பும்ரா இன்னும் குணமடையவில்லை. இதன் காரணமாக அவர் சம்பியன்ஸ் டிராபி தொடரில் பங்கேற்கவில்லை.

இது குறித்து பி.சி.சி.ஐ வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, "முதுகுப் பகுதியில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா 2025 ஐ.சி.சி சம்பியன்ஸ் கோப்பை தொடரில் இருந்து விலக்கப்பட்டார். அவருக்கு மாற்றாக ஹர்ஷித் ராணா அணியில் இடம்பெறுகிறார். மேலும் இந்திய அணியில் வருண் சக்கரவர்த்தியும் இடம்பெற்றுள்ளார். இவர் யஷஸ்வி ஜெய்ஸ்வாலுக்கு மாற்றாக இடம்பெற்றுள்ளார்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.



சம்பியன்ஸ் கோப்பைக்கான இந்திய அணி உறுதிப்படுத்தப்பட்ட பட்டியல் ரோகித் சர்மா (கப்டன்), ஷுப்மன் கில் (துணை கப்டன்), விராட் கோலி, ஷ்ரேயஸ் அய்யர், கே.எல்.ராகுல் (விக்கெட் கீப்பர்), ரிஷப் பண்ட் (விக்கெட் கீப்பர்), ஹார்திக் பாண்டியா, அக்சர் படேல், வாஷிங்டன் சுந்தர், குல்தீப் யாதவ், ஹர்ஷித் ராணா, முகமது ஷமி, அர்ஷ்தீப் சிங், ரவீந்திர ஜடேஜா மற்றும் வருண் சக்கரவர்த்தி ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

யஷஸ்வி ஜெய்ஸ்வால், முகமது சிராஜ் மற்றும் சிவம் துபே மூன்று மாற்று வீரர்களும் தேவைப்படும் போது டுபாய் செல்வார்கள். (6-8)

## ஸ்மித் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி அறிவிப்பு

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) நடத்தும் சம்பியன்ஸ் கோப்பை 2025 கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரில் மொத்தம் எட்டு அணிகள் மோதுகின்றன. பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெறும் இந்த தொடருக்காக ஒவ்வொரு அணியும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

சம்பியன்ஸ் கோப்பை 2025 தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் காயத்தால் அவதிப்பட்டு வரும் கப்டன் பேட் கம்மின்ஸ் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் ஜோஷ் ஹேசில்வுட் ஆகியோர் அணியில் இருந்து விலகியுள்ளனர். மேலும், சொந்தக் காரணங்களுக்காக சம்பியன்ஸ் கோப்பை அணியில் இருந்து விலகியுள்ளார்.

இந்நிலையில், சம்பியன் கோப்பைக்கு ஸ்டீவ் ஸ்மித் தலைமையிலான 15 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணி வீரர்கள் விபரம்: ஸ்டீவ் ஸ்மித் (கப்டன்), சீன் அபோட், அலெக்ஸ் கேரி, பென்ட்வார்ஷுயிஸ், நாதன் எல்லிஸ், ஜேக் ஃப்ரேசர்-மெக்குர்க், ஆரோன் ஹார்டி, டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், ஸ்பென்சர் ஜான்சன், மார்னஸ் லபுஷேன், க்ளென் மேக்ஸ்வெல், தன்வீர் சங்கா, மாட்த்யூ ஷார்ட், ஆடம் ஜாம்பா ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். (6-8)




## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3290

Search for people, places and things

**நதியா**





**ஜேந்தி**




**கிசோக்**




**கனுசிகா**




**கீர்த்தனா**




**கபிலன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படிப்பட்ட இருளான சூழ்நிலையிலும் நம்பிக்கை என்னும் ஒளிக்கீற்றினை பற்றிக்கொண்டு தொடர்ந்து முன்னேறுவோம். - யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிங்களப் பேரினவாதிகளுக்கு தீனி கொடுக்காதீர்கள்

நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் என்பது சிங்கள மக்களிடம் ஏற்பட்ட மனமாற்றம் என்பதை நாம் ஐயம் தெளிவுறப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆம், மகிந்த ராஜபக்ஷ தரப்பைச் சிங்கள மக்கள் ஓட ஓடத் துரத்தியதற்கு தமிழ் மக்களாகிய நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

எங்கள் இனத்தை அழித்தவர்களை எங்கள் கண் முன்னாலேயே சிங்கள மக்கள் ஓடத் துரத்தினர். இதை நாம் ஒருபோதும் மறந்து விடலாகாது.

உண்மை. 2022ஆம் ஆண்டு தென்பகுதியில் நடந்த அரகல போராட்டம் தனித்து மகிந்த ராஜபக்ஷ தரப்புக்கு மட்டும் எதிரானதன்று.

மாறாக, இந்த நாட்டில் யாரெல்லாம் இனவாதத்தைத் தூண்டி தமிழ் மக்களுக்கு எதிராக வஞ்சம் தீர்த்தார்களோ அவர்களையும் விரட்டியடிப்பதாக அரகலப் போராட்டம் அமைந்திருந்தது.

மேற்படி அரகலப் போராட்டம் குறித்து அரசியல் விமர்சகர்கள் பலவாறாகத் தமது கருத்தியலை முன்வைக்கலாம்.

ஆனால் தமிழர்களாகிய எங்களைப் பொறுத்தவரை, அரகலப் போராட்டம் என்பது தமிழ் மக்களுக்கு அட்டூழியம் செய்த சிங்களப் பேரினவாதிகளுக்கு எதிரானது என்பதுதான் உண்மை.

இதற்குச் சான்றாதாரமாகப் பலவற்றைக் குறித்துரைக்கலாம். அதில் ஒன்று தமிழ் மக்களுக்கு எதிராக மோசமான கருத்துக்களைத் தெரிவித்து வந்த விமல் வீரவன்ச என்ற பேரினவாதியை ஒரு சிங்களப் பொதுமகன் நடுவீதியில் வைத்து மிகமோசமான வார்த்தைகளால் திட்டியதைப் பார்த்தபோது, சிங்கள மக்கள் உண்மையைப் புரிந்துவிட்டார்கள் என்பதை எம்மால் உணர முடிந்தது.

தவிர, அரசியல் மாற்றம் என்பது தனித்து சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களைப் பதவி இறக்கம் செய்தது மட்டுமல்ல, சிங்களப் பேரினவாதிகளை வாய்திறக்காமல் செய்ததும் ஆட்சி மாற்றத்தினூடாகவே சாத்தியமாயிற்று.

ஆம், எந்நாளும் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களுக்கு எதிராகத் துவேசத்தைத் தூண்டும் வகையில் உரையாற்றுகின்ற சரத் வீரசேகரவை சிங்கள மக்கள் தோற்கடித்தனர்.

சரத்த வீரசேகரவுக்கு சிங்கள மக்கள் வழங்கிய இந்தத் தீர்ப்பு என்பது; இனவாதத்தைத் தூண்டுகின்ற பிரகிருதியே! இனி நீ வாய்திறக்கக்கூடாது என்பதாக பொருள்படும்.

இவ்வாறு சிங்கள மக்களிடம் ஏற்பட்ட மனமாற்றம் இந்த நாட்டின் ஆட்சிப்பீடத்தில் அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தை அமர்த்தியது.

அநுர அரசாங்கம் தமிழ் மக்களுக்கு என்ன தரும் என்பதற்கு அப்பால் ஊழல் ஒழிப்பு, நேர்மையான அரச நிர்வாகம், அரசியல் செல்வாக்குக்கு முற்றுப் புள்ளி வைத்தல் என்றவாறு நல்லவை நடக்கும் என்ற நம்பிக்கையைத் தந்துள்ளது.

இஃது நிச்சயம் எமது நாட்டுக்குத் தேவையானது.

எனவே இந்த நேரத்தில் தையிட்டி விகாரையை உடைப்போம் என நாங்கள் கூறினால், அஃது அங்கு முடங்கிக் கிடக்கின்ற சிங்களப் பேரினவாதிகளுக்குத் தீனி போடுவதாக ஆகிவிடும்.

அத்தோடு இந்த நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்று நினைக்கின்ற சிங்கள மக்களின் முயற்சியையும் அது பாழாக்கிவிடும். இதை நாம் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்.

# இந்த ஆண்டு வரிகளைக் குறைப்பதற்கு எவ்வித சாத்தியமும் இல்லை

## பிரதி அமைச்சர் சதுரங்க

(கொழும்பு)

நாட்டில் இந்த ஆண்டு வரிகளைக் குறைப்பதற்கு எவ்வித சாத்தியமும் இல்லை எனப் பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட ஒப்பந்தங்களின் படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.1 வீத வரிகளைச் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, மறைமுக வரிகளைக் குறைப்பது காலப்போக்கில் செய்யப்பட வேண்டும் எனவும், ஏனெனில் இந்த ஆண்டுக்குள் வரி குறைப்பை எதிர்பார்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்தச் செயல்முறையிலிருந்து நாம் மீண்டு, வருவாய் வசூலின் செயல்திறன் அதிகரிக்கும் போது அந்த மானியங்களை அந்தத் தொழில்களின் தயாரிப்புகளுக்குத் திருப்பித் தரும் சாத்தியம் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். விசேடமாக வங்கித்துறை மற்றும் தொழில்களின் தொழிநுட்ப முதலீடுகளுக்கு வரிச் சலுகைகளை வழங்க புதிய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, எதிர்வரும் 17 ஆம் திகதி வரவு செலவுத்திட்டத்தில் இதனையெல்லாம் காணலாம் எனவும், வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக, தொழில்களுக்கு தேவையான வசதிகள் மற்றும் ஆதரவை வழங்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த சில ஆண்டுகளில் தொழில்களுக்கு ஏற்ற சூழலை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும் கூறியுள்ளார்.

மேலும், கைத்தொழில்களுக்கான பொருட்களை இறக்குமதி செய்யும் போது புதிய வரிக் கொள்கையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# உண்மையை மறைக்கவே அரசு குரங்கைக் குற்றஞ்சாட்டுகிறது

## சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

மின்விநியோகக் கட்டமைப்பை கண்காணிப்பதற்கு பெலவத்தை பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட நவீன கட்டமைப்பின் செயற்பாடுகள் தோல்வியடைந்துள்ளது.இந்த உண்மையை மறைப்பதற்காகவே அரசாங்கம் குரங்கைக் குற்றஞ்சாட்டுகிறது என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மின்விநியோக துண்டிப்பு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபையின் கட்டமைப்பு முகாமைத்துவம் அல்லது முறைமை கட்டுப்பாடு குரங்கு மோதி செயலிழக்கும் என்று குறிப்பிடுவது நகைச்சுவையானது.

பாணந்துறைப் பகுதியில் ஒரு பகுதியில் உள்ள மின்பிறப்பாக்கியில் குரங்கு மோதினால் அந்த பகுதிக்கு மாத்திரமே மின்விநியோகம் பாதிக்கப்படும். முழு இலங்கைக்குமான மின் கட்டமைப்புக்கு ஒரு போதும் பாதிப்பு ஏற்படாது.

மின்விநியோகக் கட்டமைப்பை கண்காணிப்பதற்கு பெலவத்தை பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட நவீன கட்டமைப்பின் செயற்பாடுகள் தோல்வியடைந்துள்ளது. இந்த உண்மையை மறைப்பதற்காகவே அரசாங்கம் குரங்கை குற்றஞ்சாட்டுகிறது.

நாளாந்த மின்னுற்பத்தியை காட்டிலும் மின் பாவனைக்கான கேள்வி அதிகளவில் காணப்படுகிறது. தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 70 சதவீதம் இயற்கை மின்னுற்பத்திக்கு செல்வதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர், கிரீன் எனர்ஜி திட்டத்துக்கமைய சூரிய மற்றும் காற்றாலை மின் சக்தி ஊடாக 2600 மெகாவாட் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்பில் ஒன்றிணைக்க முடியும் என்று பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். ஆகவே இந்த அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் முறையாக செயற்படுத்த வேண்டும் என்றார். (ம)

# இளைஞன் உயிரிழப்பு 4 பொலிஸார் கைது

வாத்துவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர், உயிரிழந்த நபர் தொடர்பில் அந்த பொலிஸ் நிலையத்தின் நான்கு கான்ஸ்டபிள்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் பாணந்துறை குற்றத் தடுப்பு விசாரணை பணியகத்தால் நேற்று மாலை அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக இந்த நான்கு பேரும் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட நான்கு கான்ஸ்டபிள்களும் இன்று பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படவுள்ளதுடன், பாணந்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் பாணந்துறை குற்றத்தடுப்பு விசாரணை பணியகத்தால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வாத்துவை தல்பிட்டியவைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தந்தையே (வயது - 24) உயிரிழந்தவராவார். (ம)

# தென்னையிலிருந்து தவறி விழுந்த இளைஞன் பலி

(அம்பாறை)

அம்பாறை- நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பிரதேசத்தில் தேங்காய் பறிக்க தென்னை மரத்தில் ஏறிய இளைஞன் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவமானது நேற்று இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்தில் நிந்தவூர்-8 அல்மினன் வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய முஹமட் அன்சார் முகமட் ஆசாத் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று விடுமுறை தினமாகையினால் தேங்காய் பறிப்பதற்கு சென்ற நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன் உயரமான தென்னை மரத்தில் ஏறி தேங்காய்களைப் பறிக்கும் போது தென்னை மரத்தின் காய்ந்த ஓலையொன்றைப் பிடித்த போது கால் வழுக்கி சுவரில் விழுந்ததில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார். (ம)

# முன்னாள் எம்.பி திலீபன் இந்தியாவில் கைது

வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து இந்தியாவின் மதுரைக்குச் சென்ற ஈபிடிபி கட்சியின் முன்னாள் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் அங்கிருந்து பிறிதொரு கடவுச்சீட்டில் வெளிநாடு செல்ல முற்பட்ட நிலையில் இந்தியாவின் கேரளாவின் கொச்சி என்ற இடத்தில் வைத்து தமிழகப் பொலிஸாரால் கடந்த திங்கள் கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இந்தியாவின் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# AI வளர்ச்சியால்

# வேலை வாய்ப்புக்கள் பறிபோகாது!

## பிரான்ஸ் மாநாட்டில் பிரதமர் மோடி தெரிவிப்பு

(பாரிஸ்)

**செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியால் மனிதர்களின் வேலைவாய்ப்புக்கள் பறிபோகாது என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.**



பிரான்ஸில் இடம்பெற்ற செயற்கை நுண்ணறிவு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதமர் நரேந்திர மோடி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் 'ஏஐ வளர்ச்சியால் மனித வேலைவாய்ப்புகள் பறிபோய்விடுமோ என்ற அச்சம் தான் இந்தத் தொழில்நுட்பத்துக்கான மிகப் பெரிய இடையூறாக இருக்கிறது எனவும், நாம் ஏஐ தொழில்நுட்பத்துக்கு ஏற்ப மக்களின் திறன்களை மேம்படுத்துவதிலும் அவற்றை மாற்றியமைப்பதிலும் கவனம் செலுத்தினால் ஏஐ சார்ந்த எதிர்காலத்தை எளிதில் எதிர்கொள்ளலாம்.


அத்துடன் தொழில்நுட்ப பயன்பாட்டில் ஜனநாயகத்தைப் புகுத்த வேண்டும் எனவும் மக்கள் நலனை மையமாகக் கொண்ட செயலிகளை ஊக்குவிக்க வேண்டும் எனவும், குறிப்பாக சைபர் பாதுகாப்பு, டீப் ஃபேக் கட்டுப்பாடு, திரிக்கப்பட்ட தகவல்கள் தொடர்பான பிரச்சினைகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் எனவும் ஏஐ எதிர்காலம் நன்மைக்கானதாகவும் அனைவருக்குமானதாகவும், இருக்க வேண்டும் என்பதற்காக இந்தியா தனது நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்ள தயாராக இருக்கிறது.

மேலும் உலக நாடுகளின் ஏஐ மீதான சார்பு எல்லைகள் கடந்து ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளதாகவும் அதனால் ஏஐ தொழில்நுட்பத்தை நிர்வகிக்க சர்வதேச கூட்டு முயற்சி தேவை எனவும் நாம் பகிர்ந்து கொண்டுள்ள மதிப்பீடுகள், நாம் சந்திக்கும் அபாயங்கள், நாம் கட்டமைக்கும் நம்பிக்கைகள் ஆகியனவற்றை உள்ளடக்கியதாக ஏஐ தொழில்நுட்ப மேலாண்மை விதிகள் இருக்க வேண்டும்' எனவும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

குறித்த மாநாட்டில் அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் சீனத் துணை பிரதமர் டிங் சூயெக்ஸியாங் உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் மற்றும் மைக்ரோசொப்ட் கூகுள், ஓபன் ஏஐ உட்பட பல்வேறு நிறுவனங்களின் மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## மகாகும்பமேளாவில்

### வாகனங்களால் நிரம்பிய வீதிகள்



(டில்லி)

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா நடைபெற்று வருகிறது. இந்த மகா கும்பமேளா ஜனவரி 13 முதல் பெப்ரவரி 26 வரை நடைபெறுகிறது. கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி நதிகளின் சங்கமமான புனித இடமான சங்கமத்தில் இந்தப் பிரம்மாண்ட நிகழ்வு நடக்கிறது. இது உலகின் மிகப்பெரிய ஆன்மிக நிகழ்வாகக் கருதப்படுகிறது.

இந்த நிகழ்வில் இந்தியா முழுவதும் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் 40 கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்கின்றனர். புனித நீராட்டம், யாகங்கள் மற்றும் ஆன்மிக நிகழ்வுகள் பக்தர்களுக்கு மிக முக்கியமானதாக உள்ளன.

இந்த ஆன்மிக நிகழ்வில் பங்கேற்கப் பக்தர்கள் புனித நீராடுவதற்காக மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப்பிரதேசம் வழியாக பிரயாக்ராஜ் நோக்கி செல்ல முயன்றதால் வீதிகளில் 300 கிலோமீற்றர் தூரத்திற்கு கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. வாகனங்கள் பல மணி நேரமாக சிக்கியதால் மக்கள் கடும் சிரமங்களைச் சந்தித்தனர். அதிகாரிகள் உணவு மற்றும் தங்குமிட ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். மத்தியப் பிரதேசத்தின் முக்கிய நகரங்களான ஜபல்பூர், கட்னி, மைஹார் மற்றும் ரேவா ஆகிய பகுதிகளில் இருந்து பிரயாக்ராஜ் நோக்கி செல்லும் வீதிகள் வாகனங்களால் நிரம்பி வழிந்தன. இந்த நிலை பெரும் சிரமங்களை உருவாக்கியதாக பயணிகள் சமூக ஊடகங்களில் பகிர்ந்தனர்.

மொத்தம் 300 கி.மீ தூர போக்குவரத்து நெரிசல் உலகின் மிகப்பெரிய போக்குவரத்து நெரிசலாக இருக்கும் என சில பயணிகள் சமூக ஊடகங்களில் குறிப்பிட்டனர். (நி-8)

## உலகின் இரண்டாவது

### நுகர்வோர் சந்தையாகும் இந்தியா

(டில்லி)

இந்தியாவின் நுகர்வோர் சந்தை 2030 ஆம் ஆண்டுக்குள் உலகில் இரண்டாவது பெரிய சந்தையாக மாறும் என்று எடெல்வைஸ் மியூச்சுவல் பண்ட் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரிக்கும் வருமானம், இளம் உழைப்பாளர் படை, துரித நகரமயமாக்கல் என்பன நாடு முழுவதும் துரித வளர்ச்சியை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டியுள்ள அந்த அறிக்கை, 2030 இற்குள் இந்தியாவின் நுகர்வோர் செலவினமும் 4.3 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் 'தற்போது இந்தியாவின் நுகர்வோர் செலவினம் 2.4 ட்ரில்லியன் டொலர்களாகக் காணப்படுகிறது.

இந்த வளர்ச்சி இந்தியாவின் நடுத்தர மற்றும் உயர் நடுத்தர வருமான மக்கள் தொகையினருக்கு ஊக்கமளிப்பதாக அமையும். இது கொள்வனவு சக்தியில் வளர்ச்சியை ஏற்படுத்தும்.

2030 ஆம் ஆண்டுக்குள், இந்தியாவின் உழைக்கும் படை (15-64 வயது) 100 கோடியை எட்டும். இது உலகளாவிய தொழிலாளர் படையில் ஐந்தில் ஒரு பகுதியாகும். தொழிலாளர் படையில் பெண்களின் பங்கேற்பும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

2018 இல் 23 சதவீதமாகக் காணப்பட்ட பெண்களின் தொழிலாளர் படைக்கான பங்களிப்பு 2024 இல் 42 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றும் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருந்து...

பரந்தன், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கருணாரத்தினம் இந்திரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வீதியில் நடந்து சென்றவரை பேருந்து மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். (ம-316)

## கிணற்றில்...

இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் 29 வயதுடைய சற்குணராசா பிரதீபன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-316)

## புலிகளுடனான...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஞாயிறன்று ஏற்பட்ட மின் தடைக்கு மின்சக்தி அமைச்சர் குரங்குகள் மீது பழி சுமத்தினார். 33 ஆயிரம் மெகா வோல்ட் கொண்ட மின் பிறப்பாக்கி விடுதலைப் புலிகளால் தீ வைக்கப்பட்டபோதுகூட இவ்வாறு தேசியளவில் மின்சாரம் துண்டிக்கப் படவில்லை.

அவ்வாறிருக்கையில் ஒரு குரங்கால் முழு நாட்டுக்கும் மின் துண்டிப்பை ஏற்படுத்த முடியுமா? அமைச்சரால் குறிப்பிடப்பட்ட இந்தக் கருத்து பாரிய சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், பின்னர் கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளே இதற்குக் காரணம் என்று அமைச்சர் குறிப்பிட்டார் எனச் சுட்டிக்காட்டியிருந்தார். (ம)

## தொப்புள்...

தொப்புள் கொடி உறவுகள் எனக் கூறுவதில் பயனில்லை எனவும் கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

தமிழக மீனவர்கள் அத்துமீறும் செயற்பாடு தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழக மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது. கடந்த காலங்களில் மூன்று நாட்கள் வந்தார்கள், தற்போது ஏழு நாட்களும் வருவதற்கு முற்படுகின்றார்கள். எமது நாட்டு மீன்களைப் பிடிப்பது மட்டுமல்ல கடல் வளத்தையே நாசம் செய்கின்றனர். இதனால் நாளைய தலைமுறையினருக்குரிய கடல் வளம் இல்லாமல் போகின்றது.

எனவே, இலங்கை எல்லைக்குள் வந்து மீன்பிடிக்க வேண்டாம் என தமிழக மீனவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். அதற்கான உரிமை அவர்களுக்குக் கிடையாது. எமது நாட்டு கடல் எல்லைக்குள் வந்து மீன்களைப் பிடித்துக்கொண்டு செல்லும் வழியில் எங்களைத் தொப்புள்கொடி உறவுகள் எனக்கூறுவதில் பயனில்லை.

தமிழக மீனவர்கள் மீதோ, தமிழகத் தலைவர்கள் மீதோ எமக்கு எவ்வித கோபமும் இல்லை. ஒரு சில மீனவர்கள்தான் றோலர் படகுகளைப் பயன்படுத்தி, தடைசெய்யப்பட்ட வலைகளையும் பயன்படுத்தி எமது கடல் வளத்தை நாசமாக்குகின்றனர். அதனையே நாம் எதிர்க்கின்றோம்.

எமது நாட்டு எல்லைக்குள் அத்துமீறாவிட்டால் எவரையும் கைது செய்ய வேண்டிய தேவைப்பாடு எழாது. எனவே, எங்களது கடல் எல்லைக்குள் புகுந்து, கடல் வளங்களை நாசமாக்க வேண்டாம் எனப் போராடும் தமிழக மீனவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். அவர்கள் எல்லை தாண்டாவிட்டால் எவ்வித பிரச்சினையும் எழாது என்றார். (ம)

## உலகைக்...

கள் உலகளாவிய பிரஜைகள் என்ற வகையில் ஒன்றிணைய வேண்டும் எனவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் உலக அரச உச்சி மாநாட்டில் நேற்று உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி, புத்தாக்கம் மற்றும் அரச நிர்வாக மறுசீரமைப்புத் தொடர்பில் இலங்கையின் நோக்கு என்ற தலைப்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உரையாற்றினார்.

இந்த உரையில் நிலையான அபிவிருத்தி மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான இலங்கையின் அர்ப்பணிப்பும் இதன்போது [illegible]

மானிடவர்க்கம் தொடர்பான முக்கியமான துறைகளில் எதிர்கால உத்திகள் மற்றும் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்த மாநாடு உந்து சக்தியாக அமையும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உலகளாவிய சவால்களுக்கு முகங்கொடுக்க உலகளாவிய கூட்டுச் செயற்பாடும், முன்னணியொன்றினது அவசியத்தையும் வலியுறுத்தினார். (ம)

## தமிழரின்...

யாழ்ப்பாணம், வலி.வடக்கு தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்றி பொதுமக்களின் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி மாபெரும் போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த விகாரைக்கு எதிராகப் பல்வேறு அச்சுறுத்தல்கள், எதிர்ப்புகளுக்கு மத்தியில் நேற்று முன்தினம் மாலை ஆரம்பமாகிய இந்தப் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

விகாரைக்கு முன்பாக பல்வேறு கட்சிகளையும் சேர்ந்தவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பல நூற்றுக் கணக்கானோர் நேற்றுக் காலை முதல் திரண்டிருந்தனர்.

போராட்டம் இடம்பெறும் பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு, வீதித் தடைகள் போடப்பட்டு புலனாய்வாளர்களின் கண்காணிப்பும் தீவிரமாக இருந்தது.

பல்வேறு அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள், எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கறுப்புக் கொடிகளுடன் பெருமளவில் திரண்ட மக்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"அகற்று அகற்று சட்டவிரோத விகாரையை அகற்று", "வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்", "இனப்படுகொலை இராணுவமே வெளியேறு", "இந்த மண் எங்களின் சொந்தமண்", "கண் திறந்த புத்தருக்கு மண்மீது [illegible] "எமது நிலம் எமக்கு வேண்டும்" போன்ற பல கோஷங்கள் ஆர்பாட்டக்காரர்களால் எழுப்பப்பட்டன.

பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட்டதால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டதால் முறுகல் நிலை ஏற்பட்டு பதற்றமான நிலைமை தோன்றியது.

எனினும் அச்சுறுத்தல்கள், எதிர்ப்புக்குகளுக்கு மத்தியிலும் தொடர்ந்தும் விகாரகைக்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. (ம-33)

## யாழ்ப்பாண...

மன்றம் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வுகளில் தமிழகத்து அறிஞர்களும் உள்ளூர் அறிஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம)






































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணப்பெண் தேவை

01. திருநெல்வேலி, இந்து, 1990, உத்திரட்டாதி, BSc in Civil Engineering, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
02. காங்கேசன்துறை, இந்து, 1988, ரோகினி, MSc, France citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
03. வடமராட்சி, இந்து, 1988, மிருகசீரிடம், Business Mangement, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
04. காரைநகர், இந்து 1992, சுவாதி, Graduate, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
05. சுன்னாகம், இந்து, 1983, புனர்பூசம், Graduate, Network Engineer, USA citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
06. புங்குடுதீவு, இந்து, 1989, அத்தம், IT Engineer, Germany citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
07. மல்லாகம், இந்து, 1988, பூரம், BSc, G/teacher மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
08. அனலைதீவு, இந்து, 1989, ஆயிலியம், BSc(Srilanka) Quantity surveying மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
09. சங்கானை, இந்து, 1992, விசாகம், Graduate, Accountant, Germany + UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
10. இணுவில் - உரும்பிராய், இந்து, 1989, பூசம், Masters of professional Accounting canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(C-2254)

எம்மிடம் எல்லா ஜாதியிலும், எல்லா நாட்டிலும், Un married மற்றும் Divorce மாப்பிள்ளைகளும், மணப்பெண்களும் உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2255)

076 825 7716 (ஆகாஸ்)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

தொடர்புகளுக்கு :
075 498 5400, 077 937 0000
021 221 7600

(836)

## விற்பனைக்கு

LG. 9.0 Kg Full Automatic (turbo Drum) Washing machine மிக நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு.
விலை - 35,000/=
071 803 4182
உரும்பிராய்

(3405)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
விசேட விலையில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் அனைத்து நாடுகளுக்குமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

(835)

APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## விரைவு பொதிகள் சேவை

DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.

(837)

திருமுருகன் கொம்நெற்
பணியாளர் தேவை
321, K.K.S Road, Jaffna.
077 755 4528

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- திருகோணமலை
- கோப்பாய்
- பண்டத்தரிப்பு
- கொழும்பு
- சுன்னாகம்
- மானிப்பாய்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- புத்தூர்
- சங்கானை

(C-2253)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## Maths Classes (A/L & 6 - 11)

A/L Combined Maths and 6 - 11 Maths Classes (English medium/ tamil medium) வகுப்புக்கள் (personal / group) நடைபெறுகின்றன.

By : S.Linkajan (B sc - university of peradeniya)

Contact No : 076 976 6502

(3403)

## வேலையாட்கள் தேவை


- முகாமையாளர் (வயது 40 - 60 ஆண்கள் மட்டும்)
- கணனியில் சிட்டை இடுபவர் (வயது 20 - 40 ஆண்/ பெண்)
- பணியாளர்கள் (ஆண்கள் மட்டும்)
- AD வாகன சாரதி
- விற்பனைப் பிரதிநிதி

அனுபவமுள்ளவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும், சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும், வெளி மாவட்டங்களில் வசிப்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

(3408)

சுப்பர்மாக்கட் - திருநெல்வேலி 077 221 0294


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 15.01.2025 புதன்கிழமை அன்று சிவபதப்பேறு அடைந்த எங்கள் குடும்பத்தலைவர் பாசமிகு

### அமரர் சண்முகநாதன் திபாஹரன்

(வயலின் வித்துவான், போதனாசிரியர் - கட்புல அரங்கேற்ற கலைகள் பல்கலைக்கழகம், கொழும்பு)

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் நாளை (14.02.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மேலும் எமது குடும்ப குலதெய்வத்தின் மரணச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும், ஊடகங்கள் மூலமும் துக்கங்களைப் பகிர்ந்தோருக்கும் மலர் வளையங்கள், மலர் மாலைகள், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோருக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.
(3407)
தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி ரவிசாந்தினி மகேந்திரன்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் சுதுமலைச் சந்தி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரவிசாந்தினி மகேந்திரன் அவர்கள் நேற்று 12.02.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மகாலிங்கம் - சகுந்தலையம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற மகேந்திரன்(ஓய்வுநிலை வங்கி முகாமையாளர் - மக்கள் வங்கி) அவர்களின் அன்பு மனைவியும் நித்தியநந்தினி, கலாவதி, ரவீந்திரன், சுரேந்திரன், வாசுகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தபோதினி, தர்சினி, லம்போதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கஜரூபன், விநாயகன், சிவஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தனஞ்செயன், அம்ரிதா, சஞ்சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 14.02.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சுதுமலைச் சந்தி,
மானிப்பாய்.
(834)
தகவல் :
குடும்பத்தினர்
021 - 225 5621

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org